DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF THE I ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVALLUR**

OS.No : 242/2015 DW : 1

Name : குப்புராஜா என்கிற செங்கல்ராஜா Age – 91

S/o : பாப்பாராஜா Village

Taluk

Solemnly affirmed in accordance with the provision of Act of 1873 on the day of

---

Date: 02.02.2026

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1) சந்திரன் என்பவர் எங்கள் ஊரை சேர்ந்தவர் கிடையாது. பக்தாவச்சலம் என்பவர் வாத்தியராக உள்ளார். அவருக்கும் எனக்கு பேச்சு வார்த்தை கிடையாது. அவர் ஓய்வு பெற்றாரா என்பது எனக்கு தெரியாது. அவர் பத்திரத்ததில் சாட்சிகையெழுத்து போட்டுள்ளாரா என்ற விபரம் தெரியாது. நான் பத்திர அலுவலகத்திற்கு செல்லவில்லை. 2ம் பிரதிவாதி சொத்து சம்மந்தமாக எந்த பத்திரமும் யாருக்கும் எழுதிக்கொடுக்கவிலலை. 05.04.2013 அன்று காமேஷ்குமார் என்பவருக்கு 2ம் பிரதிவாதி ஒரு பொது அதிகார பத்திரம் கொடுத்துள்ளார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. அவருக்கு படிப்பறிவு கிடையாது. 12.08.2013 அன்று பவர் பத்திரத்தை அவர் ரத்து செய்த விபரம் எனக்கு தெரியும் நான் சொல்லி தான் அவர் ரத்து செய்தார். வாதி 2ம் பிரதிவாதி மீது வழக்கு போட்ட விபரம் அவருக்கு தெரியாது எனக்கு நீதிமன்றம் மூலம் சம்மன் கிடைக்கப்பெற்ற பின்பு தான் அவருக்கு தெரியும். தாவா சொத்து மதிப்பு 96 லட்சம் நிருப்பிக்கும் நான் ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சொத்து மதிப்பை தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதிக்க எந்த வித வருமானம் இல்லை என்று நான் எந்த வித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. எங்கள் ஊரை சேர்ந்தவர் என்பதால் தெரிந்ததை சொல்கிறேன். வெங்கடேசன் எனப்வருக்க கொடுத்த அதிகார பத்திரத்தில்

லோன் சம்மந்தமாக விவபரம் குறிப்பிடவில்லை என்றால் அந்த அதிகார பத்திரம் பற்றி விபரம் எனக்கு தெரியாது. நான் வெங்கடேசனுடன் ஏற்பட்ட பிரச்சனையில் நான் காவல் நிலையத்தில் எந்த வித புகாரும் கொடுக்கவில்லை.

2) வெங்கடேசன் என்பவருக்கு எழுதிக்கொடுத்த பவர் பத்திரத்தை 04.08.2015 அன்று 2ம் பிரதிவாதி ரத்து செய்தார். அந்த ரத்து பத்திரத்தில் நான் தான் சாட்சி கையெழுத்து போட்டுள்ளேன். ரத்து செய்தது சம்மந்தமாக வாதிக்கு 03.08.2015 அன்று தகவல் தெரிவித்த பின்பு தான் பத்திரத்தை ரத்து செய்தோம். அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. வாதி தாவா தாக்கல் செய்து 10 மாதம் பின்பு 2ம் பிரதிவாதி இறந்துவிட்டார் என்றால் சரிதான். இந்த வழக்கில் பதிலுரையில் 2ம் பிரதிவாதி இறந்துபின்பு தான் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல அவர் உயிருடன் இருக்கும் போதே தாக்கல் செய்யப்பட்டது. எனக்கு எழுதப்படிக்க தெரியும், பதிலுரையில் குறிப்பிட்டுள்ள விவரம் எனக்கு தெரியும்.

Taken to my dictation and corrected by me in open court read over to the witness and admitted by him as correct.

S TASNEEM
Digitally signed by S TASNEEM
Date: 2026.02.02 10:16:20 +0530

I Additional District & Sessions Judge,
Tiruvallur.